விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu
23.08.2020 ஞாயிற்றுக்கிழமை

## கிளிநொச்சியில் 4 மாணவர்கள் ஹெரோயினுடன் கைதாகினர்!

கிளிநொச்சி, ஓக 23

கிளிநொச்சி, பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்கள் நான்கு பேர், கிளிநொச்சி குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலை வைத்து இந்த மாணவர்கள் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடமாகாண தமிழ் எம்.பிக்கள் அரசுடன் இணையவேண்டும்

## அழைக்கின்றார் ஜி.எல். பீரிஸ்



கொழும்பு, ஓக 23

அரசுடன் இணைந்து செயலாற்ற முன்வருமாறு வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு கல்வியமைச்சரும், பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

02

## கட்சிப் பதவிகளில் நான் தொடர்வேன்

### நேற்று அறிவித்தார் மணிவண்ணன்



யாழ்ப்பாணம், ஓக 23

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையினால் என்மீது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலை வழங்கியுள்ளேன் எனத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் உறுப்பினர்

02

## சொல்லாமல் கொள்ளாமல் திடீரென நுழைந்தார் நாமல்!



விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் விளையாட்டு விடுதிகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்னைகள் குறித்து விசாரிக்க விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன் தினம் காலை கொழும்பின் டொரிங்டனிலுள்ள விடுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

எந்த முன்அறிவிப்பும் இல்லாமல் திடீரென இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

விளையாட்டு விடுதியில் பல குறைபாடுகளைக் கண்டறிந்த அமைச்சர் இந்த குறைபாடுகளை உடனடியாக சரி செய்ய விளையாட்டு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## புதிய அரசமைப்பை உருவாக்க ஆதரவு!

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஓக 23

நாட்டுக்கு பாதிப்பில்லாத புதிய அரசமைப்பொன்றை உருவாக்க சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும் என அந்தக் கட்சியின் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவிக்கையில், "புதிய அரசியல் திருத்தம் தொடர்பாக ஆலோசித்துள்ளோம். இதற்கு கட்சி என்ற ரீதியில் சுதந்திரக் கட்சியின் யோசனைகளை முன்வைப்பதற்காக ஒரு குழுவை நாம் நியமிக்கவுள்ளோம். இதன் ஊடாக அனைத்து விடயங்களும் ஆராயப்படும்-என்றார்.

## கூட்டமைப்பின் பதவி மாற்றங்கள் முழு பொய்

### சுமந்திரன் கூறுகிறார்



கொழும்பு, ஓக 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவிக்கு செல்வம் அடைக்கலநாதனும், கட்சியின் கொறடா

02

## விக்னேஸ்வரனின் பேச்சு தமிழருக்கு நன்மை தராது!

### கூறுகிறார் டக்ளஸ்



யாழ்ப்பாணம், ஓக 23

விக்னேஸ்வரனின் நாடாளுமன்றப் பேச்சுக்கள் தமிழ் மக்களுக்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுத் தரப்போவதில்லை எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்

02

## இளைய சகோதரியை மாமனுடன் சேர்ந்து கொலை செய்த பெண் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஓக 23

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெடுந்தீவைச் சேர்ந்த இளம் பெண்ணை மன்னாருக்கு அழைத்துச் சென்று கொலை செய்து உப்பளத்தில் வீசிய சம்பவம் தொடர்பில் அந்தப் பெண்ணின் சகோதரி உள்ளிட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையின் பிரதான சந்தேக நபரான இளம் பெண்ணின் மாமனார் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகிறார்.

மன்னார் பொலிஸாரின் புலன் விசாரணையில் மன்னார் நகரில் உள்ள உணவகம் ஒன்றின் சிசிரிவி கமரா பதிவை வைத்து நெடுந்தீவைச் சேர்ந்த பெண்கள் இருவரும் ஒரு வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செட்டிக்குளத்தில் வசிக்கும் பிரதான சந்தேக நபர் தற்போது

02

## தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக பிக்குகளுக்குள் தொடரும் மோதல்

### அதனை ரத்துச் செய்யுமாறு ரமன்ன மகா நிக்காய கோரிக்கை

கொழும்பு, ஓக 23

பிக்குகளின் கட்சியான "அப்பே ஜனபலா பக்ஷய"வின் தேசியப்பட்டியல் ஆசனத்துக்காக தொடர்ந்து இடம்பெறுவரும் மோதல்களையடுத்து, அதற்கான தேசியப்பட்டியல் ஆசனத்தை ரத்துச் செய்யுமாறு ரமன்ன மகா நிக்காயாவின் நிறைவேற்றுக்குழு தேர்தல் ஆணைக்குழுவிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

பொதுத் தேர்தலில் இந்தக் கட்சிக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தை

02

## சிறுவர் துஷ்பிரயோகங்களை விசாரிக்க தனியான நீதிமன்று

### நீதி அமைச்சர் யோசனை

கொழும்பு, ஓக 23

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள், சித்திரவதைகள் தொடர்பாக விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

"சில உண்மைகளை மறைக்க முடியாது. பூவைப் போன்ற குழந்தைகளுக்கு

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இளைய சகோதரியை...

தலைமறைவாகியுள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜூ யின் (வயது-21) என்ற இளம் பெண்ணே இவ்வாறு கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு மன்னார் உப்பளத்தில் வீசப்பட்டிருந்தது.

அவரது சடலம் மன்னார் உப்பளம் பகுதியில் இருந்து கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து மன்னார் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். தடயவியல் பொலிஸாரின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தடயப்பொருள்களும் மீட்கப்பட்டன. சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின் படி பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு, அவரது கால்கள், கைகள் பிடித்து வைத்திருக்கப்பட்ட நிலையில் மூச்சுத் திணறலால் உயிரிழந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் அடையாளங்களைக் கொண்டு அவர் தொடர்பில் மடு (மடு ஆலயத் திருவிழா இடம்பெற்ற காலப்பகுதி) மற்றும் மன்னாரில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது மன்னாரில் உள்ள உணவகம் ஒன்றில் கொல்லப்பட்ட இளம் பெண், இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவரும் சென்று உணவு உட்கொண்ட காட்சி பதிவாகியிருந்தது. அந்தக் காட்சியைப் பெற்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆரம்பத்தில் அந்தப் பெண்கள் நாவற்குழி என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு அவர்கள் இல்லை. தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளில் கொல்லப்பட்ட பெண் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்ட இளம் பெண்ணின் சகோதரி (வயது -30), அவரது பெரியதாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் நெடுந்தீவில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்று மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரும் மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், தலைமறைவாகியுள்ள 50 வயதுடைய பிரதான சந்தேக நபரான கொல்லப்பட்ட பெண்ணின் மாமனார் தேடப்பட்டு வருகிறார்.

“சகோதரியின் கணவருக்கும் கொல்லப்பட்ட இளம் பெண்ணுக்கும் இடையே தொடர்பு உள்ளதாக அவரது சகோதரி சந்தேகம் கொண்டுள்ளார். இந்தச் சந்தேகத்தால் சகோதரிகள் இடையே முரண்பாடு நீடித்துள்ளது.

இளம் பெண்ணின் தந்தை காலமாகிய நிலையில் தாயார் வெளிநாட்டில் உள்ளார். அவரது தாயின் சகோதரன் செட்டிக்குளத்தில் உள்ளார். அவர் வெளிநாட்டு முகவர் நிலையத்துடன் தொடர்புடையவர். அதனால் கொல்லப்பட்ட இளம் பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறியுள்ளார்.

அதனால் கொழும்பில் சில ஆவணங்கள் கையளிக்கவேண்டும் என்று தெரிவித்து சகோதரிகள் இருவரையும் அவர்களது பெரியதாயின் மகனின் மனைவியையும் அழைத்துக் கொண்டு மன்னார் பயணித்துள்ளார். அங்கு நகரில் நடமாடிவிட்டு உப்பளத்தில் எவரும் இல்லை என அறிந்து இளம் பெண்ணை மூவரும் அங்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு மாமன் கழுத்தை நெரிக்க மற்றைய இரு பெண்களும் கால்களையும் கைகளையும் பிடித்துவைத்திருந்துள்ளனர். உயிர் பிரிந்ததும் அங்கிருந்து தப்பித்துள்ளனர்” என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் கங்காபதி ஆர்த்தனன் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சோமதிலக, பொலிஸ் சார்ஜன்ட் பியசேன, பொலிஸ் கொஸ்தாபல் வரதன், நிசாந்தன், பெண் பொலிஸ் கொஸ்தாபல் பிரியா மற்றும் பொலிஸ் சாரதி ஜனந்தன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் பிரிவே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## விக்னேஸ்வரனின்...

துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தன்னுடைய நாடாளுமன்ற முதலாவது உரையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், அவ்வாறான கருத்துக்கள் சில தமிழ் ஊடகங்களாலும் சமூக ஊடகங்களாலும் பெரிதாகச் சிலாகிக்கப்பட்டாலும், எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்னைகளுக்கோ அல்லது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கோ எந்தவிதமான தீர்வைப் பெற்றுத் தராது எனவும் பாதகங்களையே அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பலமான மத்திய அரசு அமைந்துள்ள நிலையில், அந்த அரசுடன் தனக்கு இருக்கும் தேசிய நல்லிணக்கத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்னைகளை தீர்க்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

## தேசியப் பட்டியல்...

யாருக்கு வழங்குவது என்பதில் மூன்று புத்த பிக்குகள் தீவிரமான மோதலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் ஒருவர் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கட்சியின் செயலாளர் தலைமறைவாகியதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் புத்த பிக்குகளான கட்சித் தலைவர்கள் மிகவும் அநாகரீகமாகவும், பௌத்த வழிமுறைகளுக்கு விரோதமாகவும் தேசியப்பட்டியலைப் பெறுவதற்காக மோதல்களில் ஈடுபட்டுவருவதால், அந்தத் தேசியப்பட்டியல் ஆசனத்தை ரத்துச் செய்யுமாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசியப்பிரியவை ராமன்ய நிக்காயாவின் பிரதம சங்க நாயக்கரும், அதன் நிறைவேற்றுக்குழுவும் கேட்டுக்கொண்டிருப்பதாக அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வண. அத்துரலிய ரத்ன தேரர், பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் ஆகியோர் அபே ஜனபல பக்ஷய கட்சியின் இணைத் தலைவர்களாக உள்ளனர். வண வெடிமக விமலதிஸ்ஸ தேரர் இதன் பொதுச் செயலாளராகவும் உள்ளார். இந்த மூவருமே தேசியப்பட்டியல் ஆசனத்துக்கான மோதலில் ஈடுபட்டுள்ளார்கள்.

## சிறுவர்...

ஏதாவது பிரச்னை இருந்தால், அதன் விளைவுகள் அவர்களின் முழு வாழ்க்கையையும் பாதிக்கும். இதுபோன்ற விடயங்களை முற்றிலுமாக நிறுத்த வேண்டும். அந்த வேலையைச் செய்ய தேவையான சட்டங்களைக் கொண்டு வர முடியும்.

அமைச்சரவையின் ஒப்புதலுடன், இதுபோன்ற வழக்குகளில் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு தனி நீதிமன்றத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பிரச்சினை மிகவும் முக்கியமானது”என்று கொழும்பில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றபோது நீதி அமைச்சர் கூறினார்.

## கட்சிப் பதவிகளில்...

வி.மணிவண்ணன், முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் நானே தொடர்ந்தும் இருப்பேன் என்றும் கூறியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி இரு தினங்களில் எனக்கு கட்சித் தலைவர் மற்றும் செயலாளரினால் நான் பதவி விலக்கப்பட்டுள்ளதாகக் கடிதம் மூலம் அறிவித்திருந்தனர்

அவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்துக்குச் சட்ட நிபுணர்கள், கல்வியாளர்கள் , ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்து அதற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளேன்.

நான் பல்கலைகழகத்தில் சட்டபீடத்தில் கற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது இனத்தின் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் கை கோர்த்து, பயணித்தேன்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் படு தோல்வியடைந்தோம். அதனை அடுத்து பலர் எமது அமைப்பில் இருந்து விலகிச் சென்றனர். இருவர் துரதிஸ்டவசமாக இறந்து போனார்கள். அதன் பின்னர் தலைவர்,செயலாளர், நான் ஆகிய மூவருமே எமது அமைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். பல்வேறு அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எமது அமைப்பைக் கட்டியொழுப்பினோம்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் நாம் மகத்தான வெற்றியை பெற்றோம். அதன் பின்னர் எமது அமைப்பு உத்வேகத்துடன் முன்னோக்கிச் சென்றது.

இந்த நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நான் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றால் , தேர்தல் அரசியலில் இருந்து விலகுவேன் என அறிவித்திருந்தேன். இதனை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அரசியலில் இருந்து வெளியேறுவதைப் பலரும் விரும்பாததல் தொடர்ந்து அரசியலில் பயணிப்பேன்.

எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்துள்ளேன். எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் இயற்கை நீதி கோட்பாட்டுக்கு எதிரானது.

மத்திய குழு கூட்டம் ஏன் ? எதற்கு ? என கூறப்படாமல் கூட்டப்பட்டது. எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. என் தரப்பு நியாயங்களைக் கூற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை இது ஜனநாயகம் இல்லாதது. அறமற்ற செயற்பாடாகும்.

அதில் பிரதான குற்றசாட்டு பணம் வாங்கியதாக உள்ளது. நான் என் சொந்த தேவைக்காகப் பணம் பெறவில்லை. அதனை முற்றாக மறுக்கிறேன். ஏனைய விடயங்கள் தொடர்பில் பொது வெளியில் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. அது தொடர்பில் எனது பதில் கடிதத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

எனக்கு எதிராகக் கட்சியினால் எடுக்கப்பட்டது ஜனநாயகப் பண்பற்ற ஒரு தீர்மானம் என்பதாலும் , இயற்கை நீதி கோட்பாட்டுக்கும் எதிரானது என்பதனாலும் நான் தொடர்ந்து தேசிய அமைப்பாளராகவும் , ஊடகப் பேச்சாளராகவும் செயற்படுவேன். எம் இனத்திற்காக உயிர் நீத்தவர்களை மனதில் நிறுத்தி அர்ப்பணிப்புடன் எனது செயற்பாடுகள் தொடரும் என ஆணித்தரமாக கூறுகிறேன்.

இன்று தேசியம் பேசுபவர்கள் பிளவுபட்டு நின்பதனால் சிங்களக் கட்சிகள், தேசியம் பேசாதவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். அதனால் சிறு சிறு பிரச்னைகளுக்காகப் பிரிந்து செல்வதனை நான் என்றைக்கும் ஏற்கமாட்டேன்.

தேர்தல் காலத்தில் எனக்கு எதிராக கட்சியைச் சேர்ந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கடந்த 09ஆம் திகதி எனது நண்பன் சட்டத்தரணி அர்ஜூனாவுடன் சென்று சந்தித்து முறையிட்டு சில ஆதாரங்களையும் முன் வைத்தோம். அது தொடர்பில் எனக்கு இதுவரை தலைவர் எந்தப் பதிலையும் தரவில்லை.

எனக்கும் தலைவருக்கும் இடையிலான உறவு ஆழமானது. நாம் என்றும் இணைந்து செயற்படுவேன். நான் எனது கட்சியுடன் நேசக்கரத்தை நீட்டுவேன். எனது கட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டு மக்கள் சேவைக்காக செயற்படும். அதற்காகத் தொடர்ந்து செயற்படுவேன் என உறுதி அளிக்கிறேன்.

காலங்கள் பல பதில்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் என நம்புகிறேன்- என்றார்.

## வடமாகாண...

மற்றும் மல்வத்துப்பீடங்களின் தலைமைத் தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட பின் கல்வியமைச்சர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் அரசியல் மிகவும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் அல்லர்.

வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் கூட அரசுடன் ஒத்துழைத்து செயற்படத் தயாராகிவிட்டார்.

தாங்களே தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் என்றும், தமிழர்களின் குரல் என்றும், தமிழ் மக்கள் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்குத் தங்களிடமே அதிகாரம் இருப்பதாகவும் கூட்டமைப்பு இதுவரை நாடாளுமன்றத்தில் கூறிவந்தது. எனினும் இனி அவ்வாறு அவர்களால் கூறமுடியாது.

இன்று வேறு சில தலைவர்களும் வடக்கிலிருந்து தெரிவாகியுள்ளனர். விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார், அங்கஜன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர். தமிழ் மக்கள் பொறுப்புக்ளைப் பகிர்ந்து கொடுத்துள்ளனர்.

வடக்கில் கல்வி சார்ந்த ஆவல் அதிகரித்திருக்கிறது. அரசு பாரபட்சம் காட்டாது. அனைவருடைய ஆதரவும் அரசாங்கத்திற்கு அவசியம்-என்றார்.

## கூட்டமைப்பின்...

பதவிக்கு தர்மலிங்கம் சித்தார்த்தனும் நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தலைவர்களுக்கு இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இரா.சம்பந்தன் இந்த முடிவை அறிவித்தார் எனச் சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் பிரேரிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட்டு, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வரையில் இவற்றை வெளியிடுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது என்றும் செய்திகள் வெளியாகின.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சுமந்திரன் “அவ்வாறு வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை” எனக் கூறியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.08.2020 ஞாயிற்றுக்கிழமை

சார்வரி, ஆவணி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 492 7805

# கூட்டமைப்பின் பின்னடைவிற்கு காரணமானவர்?

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் மற்றும் கூட்டமைப்பின் கொறடா ஆகிய பதவிகளில் மாற்றம் செய்வதற்கு சம்பந்தன் இணக்கம் தெரிவித்திருக்கின்றார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும் சம்பந்தனுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவை தொடர்பில் இணக்கம் காணப்பட்டது. இந்த சந்திப்பின் போது, கூட்டமைப்பின் பின்னடைவிற்கான காரணங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளன. இதன்போது சுமந்திரனின் பெயரையே அனைவரும் உச்சரித்திருக்கின்றனர். ஒரு கட்டத்தில் சம்பந்தனும் இதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். ஆனால், உண்மையில் கூட்டமைப்பின் பின்னடைவிற்கு சுமந்திரன் மட்டும்தான் காரணமா? வேறு எவரும் காரணமில்லையா?

சுமந்திரன் ஒரு காரணம் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இது முற்றிலும் உண்மை.

2015 பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, சுமந்திரன் ஒரு தனிநபர் கூட்டமைப்பாகவே மாறியிருந்தார். கூட்டமைப்பென்றால் சுமந்திரன் என்பதாகவே பார்க்கப்பட்டது. சர்வதேச அரங்குகளில் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு தலைவராகவே அவர் செயற்பட்டு வந்தார். சர்வதேச இராஜதந்திரிகள் மத்தியிலும் கூட்டமைப்பென்றால் அது சுமந்திரனே என்னும் நிலைமையே காணப்பட்டது. இதெல்லாம் உண்மைதான். ஆனால், இதற்கப்பால் பிறிதொரு உண்மையும் இருக்கின்றது. அதாவது, சுமந்திரன் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருந்த போது சம்பந்தன் என்ன செய்து கொண்டிருந்தார்?

தமிழர் விடுதலைக் கூட்டணி யாருக்கு - என்னும் சட்டச் சிக்கல் எழுந்த போது, அதில் சம்பந்தன் சார்பில் நீதிமன்றம் சென்றவர்தான் சுமந்திரன். இதுதான் சுமந்திரனின் முதல் அரசியல் பிரவேசம். ஆனாலும் அந்த வழக்கில் வெற்றிபெற்றது கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரிதான். அப்படிப் பார்க்கப் போனால் சுமந்திரனின் முதல் பிரவேசமே, சம்பந்தனைப் பொறுத்தவரையில் தோல்வியில்தான் முடிந்திருக்கின்றது. சுமந்திரன் போன்ற ஒருவர் தனக்குத் தேவையென்னும் அடிப்படையில்தான், 2010 இல் தேசியப் பட்டியல் ஊடாக, சுமந்திரன் கூட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டார். திறமையானவர்கள் அரசியலுக்கு அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால், அவ்வாறு வெளியிலிருந்து கொண்டு வரப்படுபவர்களிடம் கட்சியை ஒப்படைப்பதுதான் பிரச்னையானது. இதுதான் சம்பந்தன் செய்த பிரதான தவறு. இன்று அனைவருமே சுமந்திரனை நோக்கி விரல் நீட்டுவதில் தீவிரமாக நிற்கின்றனர். சுமந்திரன் ஒரு காரணம்தான், உண்மைதான் ஆனால், சுமந்திரன் இவ்வாறு கட்டுபாடுகளற்று நடந்து கொண்டமைக்குக் காரணமானவர்கள் கூட்டமைப்பின் பின்னடைவிற்கு காரணமில்லையா?

இந்த பின்புலத்தில் நோக்கினால், கூட்டமைப்பின் பின்னடைவிற்கான பிரதான காரணம் சுமந்திரனல்ல, மாறாக சம்பந்தன்தான் பிரதான காரணம். அதேவேளை சுமந்திரனை கட்டுப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் கட்டுப்படுத்தாது அமைதியாக இருந்த சித்தார்த்தனும், செல்வம் அடைக்கலநாதனும் இந்தப் பின்னடைவிற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். பொதுவாகவே தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஒரு மரபுண்டு. அதாவது, நன்மை நடந்தால் அதற்கான பெருமையை கட்சியின் தலைமை எடுத்துக்கொள்ளும், அதுவே பின்னடைவென்றால் அதற்கான பொறுப்பை ஏனையவர்கள் மீது சுமத்திவிட்டு தலைமையில் இருப்பவர் தன்னை அப்பழுக்கில்லாதவராக காண்பித்துக் கொள்வார். கூட்டமைப்பின் பின்னடைவு விவகாரத்திலும் இதுதான் நடக்கின்றது. கூட்டமைப்பின் பின்னடைவிற்கான முதல் பொறுப்பை சம்பந்தன் எடுப்பதே சரியானது. ஏனெனில் கூட்டமைப்பின் பதிவு விடயம் தொடக்கம், கூட்டமைப்புக்குள் சுமந்திரனை தன்னிச்சையாக செயற்படுவதற்கு அனுமதித்தது வரையில், அனைத்து தவறுகளுக்கும் சம்பந்தனே பொறுப்பேற்க வேண்டும். அதுதான் ஒரு நேர்மையான தலைமைக்கு அழகு. அதிகாரத்தை ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு, அவருக்கான கட்டுப்பாடுகளை விதிக்காவிட்டால், சுமந்திரனிடம் மட்டுமல்ல, சுமந்திரனின் இடத்தில் செல்வம் இருந்தாலும் இதே தவறுகள்தான் மீண்டும் நடக்கும். ஒரு ஜனநாயகக் கட்சிக்குள், கூட்டுத் தீர்மானங்களுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படும்போது, அது தனிநபர் மேலாதிக்கத்திற்கும் ஜனநாயக துஷ்பிரயோகங்களுக்குமே வழிவகுக்கும். அதுதான் கூட்டமைப்புக்குள் நடந்ததும். இதுவேதான் கூட்டமைப்பின் இன்றைய பின்னடைவிற்கும் காரணமாகியது.

# உலக வங்கியின் எச்சரிக்கை!

*கொரோனா வைரஸ் தொற்றினால் 100 மில்லியன் மக்கள் கடுமையான வறுமையை எதிர்கொள்ள நேரிடுமென உலக வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.*

*வொஷிங்டனை தளமாகக் கொண்ட உலக வங்கி முன்பு 60 மில்லியன் மக்கள் கடுமையான வறுமையில் சிக்கிவிடுவார்கள் எனத் தெரிவித்த நிலையில், புதிய மதிப்பீட்டின் படி 70 முதல் 100 மில்லியன் மக்கள் வறுமையை எதிர்கொள்ள நேரிடுமென உலக வங்கியின் தலைவர் டேவிட் மால்பாஸ் தெரிவித்துள்ளார்.*

*மேலும் கொரோனா தொற்றுநோய் மோசமடைந்துவிட்டால் அந்த எண்ணிக்கை உயரக்கூடும் என்று தெரிவித்துள்ளார்.*

*கடன் கொடுப்பனவுகளை நிறுத்தி வைப்பதற்கான உறுதிப்பாட்டைத் தாண்டி, ஏழை நாடுகள் வைத்திருக்கும் கடனின் அளவை கடனாளிகள் குறைப்பது அவசியமானது என்று அவர் கூறினார்.*

# வாகனங்களுக்குப் புகைச் சான்றிதழ் தேவையில்லை என்ற தகவல் பொய்

## நடைமுறையில் மாற்றம் கொண்டு வரத் திட்டம்

*கொழும்பு, ஓக 23*

*வாகனங்களுக்கு புகை சான்றிதழை கட்டாயமில்லை என பரப்பப்படும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்று வாகன ஒழுங்குமுறை, பேருந்து சேவைகள், போக்குவரத்து, ரயில்வே மற்றும் மோட்டார் கைத்தொழில் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.*

*இதுபோன்ற எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.*

*இருப்பினும், வாகனங்களுக்கான வரிச் சான்றிதழைப் பெறும்போது புகை சான்றிதழை வழங்குவதற்குப் பதிலாக, வாகனம் ஓட்டும்போது சாரதிகள் கட்டாயமாக வைத்திருக்கவேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டுவதற்காக விதிகளைத் திருத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறினார்.*

*புகைச் சான்றிதழ்களைப் பெறுவதில் பல்வேறு முறைகேடுகளைத் தடுக்கவும், வாகனங்களின் புகையால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகளைக் குறைக்கவும் இந்தத் திட்டத்தை செயல்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.*

# அத்துரலிய ரத்ன தேரர் சூழ்ச்சி!

## சிங்கலே தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

*கொழும்பு, ஓக 23*

*கலகொட அத்தே ஞானசார தேரரை ஏமாற்றி விட்டு, எங்கள் மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல அத்துரலிய ரத்ன தேரர் சூழ்ச்சியில் ஈடுபட்டு வருவதாக சிங்கலே தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.*

*அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் ஆகியோர் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூலுடன் இரவு நேரத்தில் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக அந்த அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பிரதீப் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.*

*கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*அத்துரலிய ரத்ன தேரர், ஞானசார தேரருக்கு தண்ணிக் காட்டி விட்டு, நாடாளுமன்றத்திற்குச் செல்ல முயற்சித்து வருகிறார்.*

*எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைத்துள்ள தேசிய பட்டியல் ஊடாக அத்துரலிய ரத்ன தேரரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் விதம் குறித்து கலந்துரையாடி வருகின்றனர்.*

*இந்த அரசியல் விகடத்தை உடனடியாக நிறுத்துமாறு ரதன தேரரிடம் கோருகிறோம்- என்றார்.*

# 46 சிறுவர்கள் சிறைகளில்!

*கொழும்பு, ஓக 23*

*5 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் 46 பேர்வரை இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*போதைப்பொருள் குற்றச்சாட்டு போன்ற பல்வேறு வழக்குகளில் சிறை வைக்கப்பட்டு சிறைச்சாலைக்குள்ளேயே பல கர்ப்பிணிப் பெண்களுக்கு குழந்தைகள் பிறந்துள்ளன.*

*இவ்வாறு பிறந்த குழந்தைகள் அவர்களுடைய தாய்மாருடன் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சிறைகளில் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.*

*இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் திணைக்களத்தைச் சுட்டிக்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.*

*இந்த சிறுவர்கள் பற்றிய விபரங்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# பொய் கூறிய மைத்திரியை புனர்வாழ்வுக்கு உட்படுத்துக!

## சரத் பொன்சேகா கோரிக்கை



கொழும்பு,ஒக. 23

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பொய் கூறிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தற்போதைய அரசு புனர்வாழ்வளிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு அப்போதிருந்த அரசே, பொறுப்பேற்க வேண்டுமென நான் அப்போதே கூறியிருந்தேன்.

அரசு பொறுப்பேற்க வேண்டும் என்றாலும், அப்போதைய எங்களது அரசில் பாதுகாப்பு அமைச்சை வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே, இந்தத் தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தும் தடுக்கத் தவறியவர் என்பதால் அவரே இதில் முதலாவது குற்றவாளி.

பாதுகாப்பு அமைச்சராக அவர் தேசிய பாதுகாப்புக்கு தேவையான எந்தவொரு தீர்மானங்களையும் எடுக்கவில்லை.

எங்களது பக்கத்தில் அவரை வைத்திருப்பது பயனற்றது என்பதாலேயே அவரை ஆளுங்கட்சிக்கு வழங்கியிருக்கிறோம். அவருக்குப் புனர்வாழ்வளிக்கவேண்டும்.

தேசிய பாதுகாப்புச் சபையையும் பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் அவர் கூட்டவில்லை . உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு தகவல் வழங்கபட்டிருந்தது. ஆனால், அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, தாக்குதல்கள் தொடர்பில் அவருக்கு முன்கூட்டிய தெரியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தாக்குதல் நடக்கும்போது, மைத்திரி சிங்கப்பூரில் இருந்தார். காலையில் தாக்குதல் நடைபெற்றது. ஆனால், மைத்திரி அன்றிரவு 12 மணிக்கே நாட்டுக்கு வந்திருந்தார். உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் நடைபெற்றவுடன் நீங்கள் ஏன் நாட்டுக்கு வரவில்லை என்று, மைத்திரியிடம் கேள்வி கேட்டிருந்தேன். சிங்கப்பூரிலிருந்து பகல் மூன்றுக்கும், இரவு 9 மணிக்கும் இலங்கைக்கு வரும் விமானத்தில் தனக்கு சீட் கிடைக்கவில்லை என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் சாட்சியம் வழங்கிய மைத்திரி பொய் கூறினார்.

சிங்கப்பூரிலிருந்து வந்த விமானங்களில் ஆசனங்கள் இருந்ததா என நாம் ஆராய்ந்துப் பார்த்தோம். பகல் வந்த விமானத்தில் 13 ஆசனங்களும் இரவு வந்த விமானத்தில் 30 ஆசனங்களும் இருந்தன. ஜனாதிபதியாக இருந்தும் மைத்திரி பொய் கூறினார்-என்றார்.

# மேலும் 10,000 பட்டதாரிகளுக்கு விரைவிலே அரச நியமனங்கள்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக 23

மேலதிகமாக பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரையும் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின்போது பாதிக்கப்பட்ட ஒரு பகுதியினர் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். அலுவலகத்தில் சந்தித்த போதே அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.



யாழ். மாவட்டத்தில் இந்தப் பட்டதாரிகள் நியமனத்திற்கு விண்ணப்பித்தவர்களில் சுமார் 1500 இற்கும் மேற்பட்டவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அல்லது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விண்ணப்பதாரிகள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள் அல்லது ஏற்கனவே தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொண்டவர்கள் என்பதற்கு ஆதாரமாக சேமலாப நிதி கணக்கைக் கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டகளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது, பல்கலைக் கழகங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளுக்கும், சேமலாப நிதிக் கணக்கினை வைத்திருந்தாலும் பட்டப்படிப்புக்கு பொருத்தமற்ற தொழில்களில் தற்காலிகமாக ஈடுபட்டு வருகின்றவர்களுக்கும் நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். எனவும் அவர் குறிப்பிட்டார்.



# 19 ஆவது திருத்தமே நாட்டை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஒக 23

19 ஆவது திருத்தத்தின் மூலம் கடந்த அரசு நாட்டை குழப்பத்தில் ஆழ்த்திய நிலையில் அரசியல் பொறிமுறையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தை சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

19 ஆவது திருத்தத்தின் உட்பிரிவின் காரணமாக மார்ச் மாதம் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதியால் முடியவில்லை. நாடாளுமன்றம் அதன் பதவிக் காலத்தில் நான்கரை ஆண்டுகள் இயங்கும்வரை கலைக்க முடியாது என்பதனாலேயே இந்த நிலை எனவும் தினேஷ் குணவர்தன கூறினார்.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தில் உள்ள அதிகாரங்கள் நாட்டைச் சீர்குலைப்பதற்காகக் கடந்த அரசால் அகற்றப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தனது கொள்கை அறிக்கையில் ஒரு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதாக உறுதியளித்தார் என்றும் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசிடம் நாடு ஒப்படைக்கப்பட்டபோது, பொருளாதார வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாகவும், 2020 இல் நாடு திரும்ப ஒப்படைக்கப்பட்டபோது பொருளாதார வளர்ச்சி விகிதம் வெறும் இரண்டு சதவீதமாகவும் இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

# வேலைவாய்ப்பு நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு முக்கிய அறிவிப்பு

கொழும்பு, ஒக 23

அரச வேலைவாய்ப்பு திட்டத்துக்கு தெரிவு செய்யப் படாத பட்டதாரிகள் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர்களிடம் முறையிடலாம் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் www.pubad.gov.lk என்ற இணையதளத்தில் மேன்முறையீடு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொழில் பெறும் பட்டதாரிகள் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி அருகிலுள்ள பிரதேச செயலகத்துக்குச் சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட ஒரு இலட்சம் பேரை தொழில்களில் அமர்த்தும் பணிகள், அதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள செயலணியின் மூலம் எதிர்வரும் செப்ரெம்பர் 02 ஆம் திகதி முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செல்வச்சந்நிதி ஆலயத்தில் நேற்று கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக 23

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நேற்று தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வருடாந்த மகோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் தற்போது நாட்டிலுள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாக ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியைப் பேணி ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.



ஆலயத்தில் உற்சவ காலத்தில் நாட்டின் அனைத்துப் பகுதியிலுமிருந்து அடியவர்கள் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் நிலையில் அங்கு கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதார பிரிவினரால் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கிருமித் தொற்று நீக்கம் செயற்பாடானது இரவு வேளைகளில் ஆலயத்தின் உட்புறம் மற்றும்வெளி வீதிகளில் முன்னெடுக்கப்பட்டது .

# மலேசியாவில் இருந்து 291பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஒக 23

கொரோனா வைரஸ் தொற்றினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு காரண மாக மலேசியாவில் சிக்கித் தவித்த 291 இலங்கையர்கள் கோலாலம்பூரிலிருந்து நேற்று சனிக்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

யு.எல் -319 என்ற விசேட விமானம் மூலம் அவர்கள் பிற்பகல் 2 மணியளவில் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலை யத்தை வந்தடைந்துள் ளனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவருக்கும் பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட் டுள்ளதாகவும் அதனை அடுத்து தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர் என்றும் விமான நிலையத்திலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இரண்டு பிரதான கட்சிகளின் தேசிய பட்டியல் முடிவில்லை

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் எங்கள் மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பான இறுதி முடிவு இதுவரை தெரி விக்கப்படவில்லை எனக் கூறப் படுகிறது.

எங்கள் மக்கள் சக்தி கட்சிக் குள் காணப்படும் சிக்கல் களுக்கு இன்னும் தீர்வு காணப் படவில்லையெனவும் இந்தச் சிக்கல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு இறுதித் தீர்மா னம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கோட்டாபயவின் அரசு தோற்கடிக்க முடியாதது

## கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறுகிறார்



கொழும்பு,ஒக.23

**இலங்கையின் வரலாற்றில் உருவாகிய அரசுகளில் இதுவே மிகவும் பலமான அரசு. மஹிந்த ராஜபக்ஷ அரசைத் தோற்கடித்த தைப் போன்று தோற்கடிக்க முடியாத பலமான அரசு எனப் பல் கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவ சிறி தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.**

அதில் அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் ஆட்சியின் கீழ் மேலும் 15 ஆண்டுகள் இருப்பதற்காக மனதை தேற்றிக் கொள்ள வேண்டும். கோட்டாபய அரசு மிகவும் பலமா னது. அதனை 1970ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசுடன் மாத்திரமே ஒப்பிட முடியும்.

கோட்டாபயவின் கீழ் 15 ஆண்டுகள் வாழ மனதை தேற்றிக்கொள்ள வேண்டும் என நான் 2009ஆம் ஆண்டு கூறினேன்.

2015ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டது மஹிந்த ராஜபக்ஷவின் திட்டமே அன்றி கோட்டாபயவின் திட்டம் அல்ல.

கோட்டாபயவின் அரசு மஹிந்தவின் அரசு அல்ல. மஹிந்தவின் அரசைக் கவிழ்த்தது போல கோட்டாபயவின் அரசைக் கவிழ்க்க முடியாது. கோட்டாபய அரசுக்கு எதிரான மாற்று சக்தியை கண்களுக்கு எட்டிய தூரத்தில் காணமுடியவில்லை.

இதனால், அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் அரசின் வேலைத்திட்டங்களின் வெற்றிகளை தீர்க்கமாக ஆராய்ந்த பின்னரே அரசுக்கு எதிராக வாயை திறக்க முடியும்-என்று குறிப்பிட்டுள்ளார்.

# பதவி துறக்கிறார் மைத்திரி கட்சிக்குள் வருகிறார் மகள்!





கொழும்பு, ஒக 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யின் வருடாந்த மாநாடு செப் ரெம்பர் 2 ஆம் திகதி கொழும் பில் நடைபெறவுள்ளது.

இதன்போது முக்கிய சில பதவிகளில் மாற்றம் வரக் கூடும் என அந்தக் கட்சி வட் டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது. இதன் படி சுதந்திரக் கட்சியின் தலை மைப் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என எதிர்ப்பார்க் கப்படுகின்றது.

இளைஞர் ஒருவருக்கு வாய்ப்பளித்து கட்சியை அடுத்தக்கட்டம் நோக்கிக் கொண்டு செல்வதற்காகவே அவர் இந்த முடிவை எடுப் பார் எனச் சிங்கள இணையத் தளமொன்றில் செய்தி வெளியாகியுள்ளது. எனினும், இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அத்துடன் இளைஞர் அணித் தலைவராகச் செயற் படும் சாந்த பண்டாரவும் பதவி விலகவுள்ளார்.

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற அங்கஜன் ராமநாத னுக்கு உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. அதே போல மைத்திரிபால சிறிசேன வின் மகளும் மத்திய செயற்குழு வுக்குள் உள்வாங்கப்படுவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் வடமத்திய மாகாணத்தில் அவர் போட்டி யிடவுள்ளார்.

# இரு வேறு இடங்களில் நேற்று விபத்துக்கள்

## ஏழு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக 23

நாட்டில் நேற்று அதிகாலை இரு வேறு பகுதிகளில் இடம் பெற்ற வாகன விபத்துகளில் எழுவர் பலியாகியுள்ளனர்.

இதன்படி கொழும்பு - குருநாகல் பிரதான வீதியின் சிலாபம் - வலக்கும்புர பகுதி யில் நேற்று அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் உயிரிழந்துள் ளனர்.

டிப்பர் ரக வாகனம் ஒன்றும், காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வலக்கும்புர பகுதியில் மரண வீடொன்று சென்று மீள குருநாகல் நோக்கிப் பயணித்த காரே இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. காரில் பயணித்த வர்களே பலியாகியுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த 05 பேரும் கட்டுமான நிறுவன மொன்றில் தொழில் புரிபவர் கள் என பொலிஸார் தெரிவித் தனர்.

அதேவேளை, எல்ல - வெள்ளவாய பிரதான வீதியின் இராவண எல்லைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

மினி பஸ்ஸொன்று வீதியை விட்டு விபத்துக்குள் ளானதிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மூவர் காய மடைந்துள்ளனர்.

# வைத்தியர்கள் பற்றாக்குறையை தீர்க்க தனியார் மருத்துவ பீடங்கள் வேண்டும்

## வலியுறுத்துகின்றார் மருத்துவர் யமுனாநந்தா

யாழ்ப்பாணம், ஒக 23

வடக்கில் தனியார் மருத்துவ பீடங்களை உருவாக்கு வதே வடக்கில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான தீர்வாக அமையும் என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்

வடக்கில் காணப்படுகின்ற வைத்தியர்கள் பற்றாக் குறை நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பிரதிப் பணிப்பாளர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடபகுதியில் வைத்தியர்கள் பற்றாக்குறை இருப்பதாக அண்மைக் காலங்களில் பொதுமக்களின் பங்களிப்புடன் ஆர்ப்பாட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலே நடத்தப்பட்டிருக்கின்றன.

இது குறிப்பாக யாழ். போதனா வைத்தியசாலையிலி ருந்து வைத்தியர்கள் அங்கு கடமைக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஆனால் யாழ். போதனா வைத்தியசாலையில் சுமார் 80க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் கடமையாற்று கின்றார்கள்.

குறிப்பாக குழந்தை மருத்துவம் உட்பட சிறு குழந்தைகளுக்கு உரிய சிறப்பு மருத்துவர்கள், இதய சிகிச்சைக்குரிய மருத்துவர்கள் , சிறுநீரக சிகிச்சை நிபுணர்கள் கடமையாற்றுகிறார்கள். தற்போது மருத்துவத்துறை நன்கு விருத்தியடைந்துள்ளது.

ஒவ்வொரு மருத்துவ நிபுணருக்கும் குறைந்தது மூன்று மருத்துவர்கள் பணியாற்றினால் மாத்திரமே அந்த பிரிவினைச் சிறப்பாகச் செயற்படுத்த முடியும்.

யாழ். போதனா வைத்தியசாலையானது மிகவும் அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்றது. தற்போதுள்ள பணிப்பாளரின் அயராத முயற்சியின் காரணமாக அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றது.

இதனால் மருத்துவப் படிப்பு மட்டுமல்ல மருத்துவப் படிப்பின் பின் பட்டப்படிப்பு அதேபோல தாதியப் பயிற்சி போன்ற பல்வேறு துறைகளில் யாழ். போதனா வைத்தியசாலை விருத்தியடைந்து வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து வைத்தியர்களை வேறு வைத்தியசாலைக்கு மாற்றும் போது சில சேவைகள் இடைநிறுத்தப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது



இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமேயா னால் புதிதாக பல மருத்துவர்களை உருவாக்கவேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் தனியார் மருத்துவ பீடம் ஒன்றை உருவாக்கும் பட்சத் தில் இந்த குறைபாட்டை நீக்கலாம். ஏனென்றால் இன்று மருத்துவம் உலகளாவிய ரீதியில் அதிகளவில் விருத்தியடைந்து காணப்படுகின்றது.

ஒவ்வொரு துறையிலும் பல மருத்துவர்கள் உள்ளார் கள் அவர்களின் கீழ் பணி புரிவதற்கும் பல மருத்துவர்கள் தேவை. அதே போல் மருத்துவ நிபுணர்கள் இளைப் பாறும்போது புதிய மருத்துவ நிபுணர்கள் உருவாக் கப்படவேண்டும். எனவே எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற் சங்கப் போராட்டங்களை கைவிட்டு புதிதாக மருத்துவ பீடங்களை உருவாக்குவதற்குரிய முயற்சியில் ஈடுபட வேண்டும். அரசிடம் போதியளவு பணம் இல்லாதபடி யினால் தனியார் மருத்துவ பீடங்களை உருவாக்குவதே இந்த காலகட்டத்தில் தேவையாக உள்ளது - என்றார்.

# விசாரணைக்கு வர முடியாது!

## வீட்டுக்கு வரச் சொல்கிறார் மைத்திரி



கொழும்பு, ஒக 23

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தன்னால் குறித்த பொலிஸ் பிரிவிற்கு ஆஜராக முடியாது எனவும் கொழும்பில் உள்ள தனது வீட்டிற்கு வந்து வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

எனவே ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் குறித்த தினத்தில் மைத்திரி பால சிறிசேனவை சந்தித்து வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

# பிள்ளையான் மீண்டும் சிறைக்கு!

கொழும்பு, ஒக 23

பாராளுமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்ற சிவனேசதுரை சந்திரகாந்தன் மீண்டும் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு விடுக்கப்பட்ட நகர்வுப் பிரேரணைக்கான கோரிக்கைகள் ஏற்கப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றினால் அவர் சபை அமர்வில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டது. ஜோசப்பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுவரும் நிலையில் கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விரும்புவாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய நிலையில் அதில் கலந்துகொள்ளுவதற்காக மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் நகர்வு மனு தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது. இதனையடுத்து 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாசன், பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கும் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வில் கலந்துகொள்வதற்குமானு அனுமதியை வழங்கினார்.

இந்நிலை யில், பாராளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் மீண்டும் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எங்களுக்கு அபிவிருத்தியை விட சமுதாய பாதுகாப்பே முக்கியம்

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



வவுனியா, ஒக 23

எமக்கு அபிவிருத்தியை விட எமது சமுதாயத்தின் தன்மா னம், எமது சமுதாயத்தின் இருப்பு, எமது சமுதாயத்தின் பாதுகாப்பு, எமது வரலாற்று சந்ததியின் எதிர்காலம் தான் முக்கியம் என்பதை முதலிலே நாங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில், வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலான நிகழ்வொன்று இடம்பெற்றி ருந்தது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு மனிதனுக்கு எவ்வளவு கஷ்டங்களை கொடுக்க முடி யுமோ அவ்வளவு கஷ்டங்களை இந்த தேர்தலில் எனக்கு தந்தார்கள். 4 மாதத்திற்கு முன் னர் என்னுடைய சகோதரரைக் கைது செய்தார்கள்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் உள்ள பயங் கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவரை அடைத்து வைத் துள்ளார்கள். 3 மாதம் முடிய மீண்டும் 3 மாதம் அடைத் துள்ளார்கள்.

என் மீது இல்லாத பொல் லாத நினைத்தும் கூட பார்க்காத குற்றச்சாட்டுக்களை சுமத்தி சி.ஐ.டிக்கு வர சொன் னார்கள். குடும்பத்தினரை இம்சைப்படுத்தினார்கள்.

வன்னி மாவட்டத்தில் அதிக வேட்பாளர்கள் போட்டியிட் டார்கள். அரச தரப்பில் போட்டியிட்ட சில வேட்பாளர் கள் தேர்தலுக்கு மட்டுமே வந்தார்கள். பல கோடிகளை கொட்டினார்கள்.

என் மீதான இல்லாத பொல் லாத குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்கள். ஆனால் மக்கள் அதனை நிராகரித்து எம்மை தெரிவு செய்தார்கள். இந்த ஒற்றுமையை பாதுகாக்க வேண்டும்.

எதிர்க்கட்சியில் இருந்து இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஏன் வெல்லக்கூட முடியாது என்றார்கள். இவற்றை தாண்டித்தான் மக்கள் எனக்கு வாக்களித்தார்கள்.

ஒரு போதும் உங்களுடைய தியாகம், முயற்சி, நம்பிக்கை வீண்போகாது. வீண் போக விடவும் மாட்டேன். கடந்த இரண்டு தசாப்தமாக அரசிய லில் நாம் இருக்கின்றோம்.

மிக அமைதியாக நோக்க மிட்டுக் கொண்டிருக்கின் றோம். எமக்கு அபிவிருத்தியை விட எமது சமுதாயத்தின் தன்மானம், எமது சமுதாயத் தின் இருப்பு, எமது சமுதா யத்தின் பாதுகாப்பு, எமது வரலாற்று சந்ததி உடைய எதிர்காலம் தான் முக்கியம் என்பதை முதலிலே நாங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்ததாக அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பவற்றை பார்க்கவேண்டும். எனவே யாரும் கலங்கத் தேவையில்லை.

அவற்றை அடைவதற்கான அரசியல் பாதையை வகுத்துச் செயற்படுவோம். எமக்கு தேசியப்பட்டியலில் ஒரு ஆசனம் தருவதாக சஜித் பிரேமதாஸ அணியினர் கூறியிருந்தார்கள்.

இருந்தாலும் கடைசி நேரத் தில் அவர்களுக்கு கிடைத்த தேசியப்பட்டியல் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் எம்மை அழைத்து எமது கட்சி ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் விட்டுத் தாருங்கள் என்றார்கள்.

இதனால் அதில் இருந்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து நாம் மென்மைப் போக்கை கடைப்பிடித்துள்ளோம்.

எதிர்காலத்தில் இந்தச் சிறுபான்மை சமூகம் ஒற்றுமை யாக பயணிக்கவேண்டிய தேவையை உணர்கின்றேன்.

அவர்வாறு பயணிக் கும்போது தான் எமது பாது காப்பை உறுதிப்படுத்தலாம்- என்றார்.



# ஆளுங்கட்சியின் பிரதி அமைப்பாளர் உதவி அமைப்பாளர்களுக்கு நியமனம்

நாடாளுமன்றத்தின் ஆளுங் கட்சியின் பிரதி அமைப்பாளர் மற்றும் உதவி அமைப்பாளர் ஆகியோருக்கான நியமனக்கடி தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி ஆளுங்கட்சியின் பிரதி அமைப்பாளராக நாடாளு மன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, மற்றும் ஜயந்த கொட்டேகொடவும் உதவி அமைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் களான ஜகத் புஷ்பகுமார, மொஹமட் முஸ்ஸமில், அசங்க நவரட்ன ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வேளையில் ஆளுங் கட்சியின் பிரதி அமைப்பாளர் மற்றும் உதவி அமைப்பாளர் களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவி னால் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித் துள்ளது.

அத்துடன் இந்த நியமனங் களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மோட்டார் குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக 23

அரியாலைப் பகுதியில் இருந்து மோட்டார் குண்டுகள் நேற்று முன் தினம் மாலை விசேட அதிரடிப் படையின ரால் மீட்கப்பட்டுள்ளன.

அரியாலைப் பகுதியில் உள்ள வெற்றுக் காணியொன் றில் இருந்து மோட்டார் குண்டுகள் அப்பகுதில் உள்ள வர்களினால் கண்டறியப் பட்டன.

உடனடியாக பொலிஸா ருக்கு வழங்கப்பட்ட தகவலை யடுத்து பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அந்த மோட்டார் குண்டுகளை மீட் டுள்ளனர்.

# சுயாதீன ஆணைக்குழுக்களை ஒருபோதும் ஒழிக்கவேண்டாம்

## தேசிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, ஒக 2

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் குறைபாடுகள் இருக்கும் அதேவேளை அதன் மூலம் அறிமுகப்படுத்திய சுயா தீன ஆணைக்குழுக்களை இரத் துச் செய்யவேண்டாம் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று வலியு றுத்தினார்.

19 ஆவது திருத்தம், ஜன நாயகம் மற்றும் நீதியை உறுதி செய்வதில் தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற சுதந் திரமாகச் செயற்படும் ஆணைக் குழுக்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என்றும் அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

"19 ஆவது திருத்தம் அறி முகப்படுத்தப்பட்ட பின்னர் சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முக்கியமா னவை. 19 ஆவது திருத்தத்தின் முற்போக்கான அம்சங்கள் ஒழிக்கப்படக்கூடாது" என அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டு 19 ஆவது திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்துக்கு அதி காரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா கவும், நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலவீனப்படுத் துவதற்கும், அனைத்து அதி காரங்களையும் ஒரு தனி நப ருக்கு வழங்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தேசிய மக் கள் சக்தி எதிர்ப்பு தெரிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கப் ரக வாகனம் ஒன்று ரயிலுடன் மோதியது!

கொழும்பு, ஒக 23

தம்புத்தேகம - பாதெனிய பகுதியில் வீதிக்கு குறுக்கே அமைந்துள்ள புகையிரத கட வையை கடக்க முயன்ற கப் ரக வாகனம் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று அதி காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் தற்போது தம்புத்தேகம மற்றும் தலாவ மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நான்கு பேர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பெரும் ஏமாற்றத்தில் ராஜாங்க அமைச்சர்கள்!

## சமாதானப்படுத்தும் முயற்சியில் கோட்டா



கொழும்பு,ஓக.23

**சமகால அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைச்சரவை தொடர்பில் இராஜாங்க அமைச்சர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

**இதனை அறிந்துகொண்ட ஜனாதிபதி, அனைத்து ராஜாங்க அமைச்சர்களையும் அழைத்து தெளிவுபடுத்தியுள்ளார்.**

இராஜாங்க அமைச்சுகளுக்கு உள்ள பொறுப்புகள் குறித்து ஜனாதிபதி விளக்கம் அளித்துள்ளார். பொறுப்புகள் தெளிவாகத் தெரியும் வகையில் இராஜாங்க அமைச்சர்களின் கடமைகளை பெயரிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களுக்காக தனியாகக் கடமைகள் வர்த்தமானியில் பதிவிடப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்குவதாகவும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முடிந்தளவு உழைக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# ஓய்வெடுக்கவுள்ள ஜோன் அமரதுங்க



கொழும்பு, ஓக 23

தாம் அரசியலில் இருந்து ஓய்வு பெறவும், ஓய்வெடுக்கவும் தயாராவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க அறிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஆசனம் ஒன்று கிடைத்தது.

எனினும் இதுவரை அந்த ஆசனத்துக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் எனக்கே அந்த ஆசனம் வழங்கப்பட வேண்டும்.

எனினும் அந்த வாய்ப்பு வழங்கப்படாது போனால் இருந்து பிரயோசனம் இல்லை என்ற அடிப்படையில் அரசியலில் இருந்து ஓய்வுப்பெற்றுவிட்டு உணவு உண்டு நித்திரைக்கொள்வதே சிறந்தது -என்றார்.

# கொழும்பில் மிதக்கும் வர்த்தக நகர் தொகுதி

கொழும்பு, ஓக 23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய கோட்டை மிதக்கும் வர்த்தக தொகுதியை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறி நிமல் பெரேராவின் தலைமையில் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த நான்கரை வருடங்களாக கோட்டை மிதக்கும் சந்தை தொகுதி உரிய முறையில் பராமரிக்கப்படாமையினால் அங்குள்ள நூற்றுக்கு 80 வீதமான கடைகளை மூட நேரிட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மிதக்கும் சந்தை உள்ள ஏரியின் நீர் சுத்தமாக இல்லாமையினால் கடந்த நாட்களாக சுற்று சூழல் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், அதனை உடனடியாக திருத்தியமைக்க உத்தரவிட்டுள்ளார்.

# நிஷாந்த சில்வாவை இலங்கையிடம் கையளிப்பதற்கு மறுத்துள்ள சுவிஸ்?



கொழும்பு, ஓக 23

நிஷாந்த சில்வாவை இலங்கைக்கு அனுப்பி வைக்க இடமளிக்கவேண்டாம் என சில அரசசார்பற்ற அமைப்புகள், ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா, சூரிச் நகரில் அரச வீடொன்றில் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் அவரைக் கண்ட இடத்தில் கைது செய்ய சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் மூன்று பிரதானிகள் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து அவரை இலங்கைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளனர்.

அத்துடன் நிஷாந்த சில்வாவை இலங்கையிடம் கையளிக்க சுவிஸ் அரசு மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸ்ரலாந்து அரசு நிஷாந்த சில்வாவுக்கு மேலதிகமாக இலங்கைத் தூதரக அதிகாரி ஒருவருக்கும் அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை தவிர முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்னவையும் சுவிஸில் தங்கியிருக்க அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# விற்பனைக்கு வைத்திருந்த தங்கூசி வலைகள் சிக்கின

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலிருந்து தடை செய்யப்பட்டுள்ள தங்கூசி வலைகள் நேற்று நீரியல்வள திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

63 கிலோகிராம் எடையுடைய ஒரு பொதியும் 50 கிலோகிராம் எடையுடைய இன்னொரு பகுதியும் நீரியல்வள திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தங்கூசி வலை பாவித்து மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவோர் நீரியல்வளத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நேற்று யாழ்ப்பாண நகரப் பகுதியில் தங்கூசி வலை விற்பனை செய்யப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.



இந்த நிலையில் அங்கு விரைந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குறித்த கடையை சோதனை செய்த போது 113 கிலோகிராம் எடையுடைய தங்கூசி வலைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தக் கடை உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அரசுடன் இணையவுள்ளனரா 3 எதிர்க்கட்சி உறுப்பினர்கள்?

கொழும்பு, ஓக 23

சிறிய கட்சிகளைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலில் அரசில் இணைந்து கொள்வது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் சிரேஷ்ட உறுப்பினர்கள் எனக் கூறப்படுகிறது.

புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்க இவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் தனக்கு ராஜாங்க அமைச்சர் பதவியை வழங்குமாறு அரசிடம் கேட்டுள்ளதுடன், ஏனைய இருவர் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்துக்கான அபிவிருத்திக்கு உதவுமாறு கோரியுள்ளனர்.

அரசுக்கு தற்போது நாடாளுமன்றத்தில் 150 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. இவர்களின் சபாநாயகரை நீக்கினால், 149 பேரின் ஆதரவு உள்ளது.

இந்த நிலையில் மேற்கூறிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் முதலிலும், ஏனைய சிலர் அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு முன்னரும் அரசுடன் இணைய திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ்.பல்கலை பொறியியல்பீடத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மூன்றாம் மற்றும் இறுதி வருட மாணவர்களுக்கான கற்கைகள் யாவும் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை வழமைக்குத் திரும்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, அறிவியல் நகர் வளாகத்தில் உள்ள பொறியியல் பீடத்தின் மூன்றாம் மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் உள்ளிட்ட கல்விசார் நடவடிக்கைகள் வரும் புதன்கிழமை முதல் இடம்பெறும்.

விடுதி வழங்கப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தந்தமது விடுதிக்கு அறிக்கையிடல் வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார்.



ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# ஒரு குடும்பத்தின் கையில் 126 அரச நிறுவனங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக 23

**ஜனாதிபதி கோட்டாபய அரசின் அமைச்சரவைக்கு கீழ் வருகின்ற 434 அரச நிறுவனங்களில் 126 நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் நிர்வாகத்தின் கீழே கொண்டு வரப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க பிரகடனம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தில்உள்ள விடயங்களை அரசு உண்மையில் நிறைவேற்று வார்களா என்பது தொடர்பில் எனக்கு சந்தேகமே உள்ளது. இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே கோட்டையில் 20 ஏக்கர் நிலத்தை விற்றனர். அத்துடன் நிறுவனமொன றுக்கு மொனரா கலை பகுதியில் காணிகள் விற்கப் பட்டன.

அதேபோன்று ஒரே நாடு ஒரே சட்டம் என கூறுகின்றனர். ஆனால் குருநாகல் நகர மேயர் தொல் பொருள் இடமொன்றை இடித்த போது அவர் மீது கை வைக்க இடமளிக்கமாட்டோம் என்றனர்.

அதேபோல் அரச சேவைக்குச் செல்லும்போது பொலிஸ் அறிக்கையை கேட்பதுடன் வழக்குகள் இருக்கின்றனவா என வும் பார்க்கின்றனர். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரும், நீதி மன்றத்தில் குற்றவாளியாக 5 வரு டங்களாக சிறையில் இருப்பவரும் உள்ளார். சட்ட மா அதிபர் தனக்கு வேலைகளை செய்ய இடமளிக்கின் றார் இல்லையெனவும் கூறுகிறார்.

இவர்களின் சேவைகள் நாட்டுக் காகவா அல்லது குடும்பத்திற்கா கவா என்று பார்க்கும்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ , பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, என்ற இருவர், அத்துடன் இராஜாங்க அமைச்சராக சசிந்திர ராஜபக்ஷ மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் நிபுண என ஒரு வலையமைப்பை உருவாக்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் 3 அமைச்சுகள் , கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் 23 நிறுவனங்கள் , சமல் ராஜபக்ஷ வின் கீழ் 17 நிறுவனங்கள், பிரதமர் வகிக்கும் அமைச்சு பதவிகளின்76 நிறுவனங்களும் , நாமல் ராஜபக்ஷ வின் கீழ் 7 நிறுவனங்களும் , சசிந்திர ராஜபக்ஷவின் கீழ் 6 நிறுவனங்களும் உள்ளன.

அதேபோன்று அமைச்சு பெயர் குறிப்பிடப்படாத முக்கிய 7 நிறு வனங்கள் பஸில் தலைமையிலான கொவிட் கட்டுப்பாட்டுப் பிரி வின் கீழ் இருக்கின்றன. இதன் படி 126நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தின் கீழ் நிர்வகிக்கப் படுகின்றன. 434 நிறுவனங்களில் 126 நிறுவனங்கள் அதாவது 26 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ச சகோதரர்கள் குழுமத்தின் கீழே இயங்குகின்றன-என்றார்.

## கனகராயன்குளத்தில் முதியவர் கொலை!



வவுனியா, ஓக 23

வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் காயங்களு டன் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீட்டொன்றின் அருகில் சடலம் இருப்பது தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை அடையாளப்படுத்தியதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

5 வயதுடைய க. இந்திரகுமார் என்ற நபரே சடல மாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தில் காயங்கள் காணப் படுகின்ற நிலையில் கொலை என்ற ரீதியில் பொலிஸ ார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். வவுனியா நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்லீமா பௌசானா சடலத்தினை நேரில் சென்று பார்வையிட்டிருந்தார்.

## பொலிஸார் தாக்கினர் என மனித உரிமை ஆணைக்குழுவில் ஒருவர் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக 23

சிவில் உடையில் வந்த பொலிஸ் அதிகாரியுடன் முரண்பட்டார் எனக் குற்றம் சுமத்தி, ஓட்டோச் சாரதி மீது யாழ்ப்பாணப் பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளி மாவட்டத்திலிருந்து பஸ்ஸில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் வந்திறங்கிய நபர் ஒருவரிடம், அப்பகுதியில் ஓட்டோ சேவையில் ஈடுபடும் நபர் ஒருவர் ஓட்டோவில் செல்வோமா எனக் கேட்டுள்ளார்.

அந்நபர் வேண்டாம் என கூறி அங்கிருந்து சென்றதும், ஓட்டோச் சாரதியும் அடுத்த வாடிக்கையாளரை பிடிக்கும் நோக்குடன் பிறிதொரு நபரை அணுகி கேட்டுள்ளார். அந்நிலையில் வேண்டாம் எனக் கூறி சென்ற நபர் சிறிது தூரம் சென்ற நிலையில் மீண்டும் திரும்பி வந்து ஓட்டோச் சாரதியுடன் முரண்பட்டுள்ளார்.

அதனால் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்புக்குச் செல்ல முயன்றவேளை அருகிலிருந்த மற்றுமொரு ஓட்டோச் சாரதி இருவரையும் சமாதானப்படுத்த முனைந்துள்ளார். சிவில் உடையில் வந்த நபர் சமாதானப்படுத்த முனைந்த நபருடனும் முரண்பட்டுள்ளார்.

அதனால் இரு சாரதிகளும் அவ்விடத்தில் இருந்து விலகி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்றுள்ளனர். அங்கு நடமாடும் சேவையில் இருந்த பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் வாய் மொழி மூலம் முறையிட்டுள்ளனர்.

அதனை அடுத்து பொலி ஸார் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு இருவரையும் அழைத்து வந்தபோது அங்கு இவர்களுடன் முரண்பட்ட சிவில் உடை தரித்த நபர் நின்றிருந்தார்.

அவரிடம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்ட போது, தான் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி எனத் தன்னை அடையாளப்படுத்திகொண்டு, ஓட்டோச் சாரதி தன்னை தாக்கினார் என முறையிட்டுள்ளார்.

அதனை அடுத்து அந்த நபருடன் முரண்பட்ட ஓட்டோச் சாரதியை பொலிஸார் கைது செய்து தமது வாகனத்தில் ஏற்றிப் பொலிஸ் நிலையம் அழைத்து சென்றுள்ளனர்.

அதன்போது சிவில் உடையில் வந்திருந்த பொலிஸ் அதிகாரியும் அந்த வாகனத்தில் ஏறி பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். அதன்போது தன்னுடன் முரண்பட்ட சாரதியை வாகனத்தினுள்





வைத்து மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளார்.

பின்னர் பொலிஸார் சாரதியை பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைத்திருந்தபோதிலும் அங்கு வைத்தும் சிவில் உடை தரித்த பொலிஸ் அதிகாரி கடுமையாகத் தாக்கியுள்ளார். அதனால் சாரதி காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சாரதியை பொலிஸார் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சாரதி, தன்னை பொலி ஸார் சித்திரவதை புரிந்து தாக்குதல் மேற்கொண்டனர் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் த.கனகராஜிடம் முறையிட்டுள்ளார்.

## மாகாணத் தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிட்டார் அனுசா!

கொழும்பு, ஓக 23

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன் என்று மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் சந்திரசேகரனின் புதல்வி சட்டத்தரணி அனுசா சந்திரசேகரன் தெரிவித்தார்.

இணையவழி கலந்துரை யாடலின்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அத்துடன் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டணி அமைத்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் அப்போதைய அரசியல் களநிலைவரத்தை அடிப்படையாகக்கொண்டே முடிவெடுக்கப்படும் எனவும் அனுசா சந்திரசேகரன் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் பொதுத்தேர் தலில் போட்டியிட்டு தனித்து வத்தை நிரூபித்துவிட்டோம் எனவும், இனிதான் வெற்றி பயணம் ஆரம்பமாகும் எனவும் அனுசா சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

AROD CARE AND BE FAIR

**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்**
**12ஆவது வருடாந்த பொதுக் கூட்டம்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 05.09.2020 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்.
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1. பிரேரணைகள் இன்றிலிருந்து 26.08.2020 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. அங்கத்துவத்தை புதுப்பிக்கவேண்டியவர்கள் புதுப்பித்துக்கொள்ளவும்.

**க.கோபாலகிருஷ்ணன்**
செயலாளர்

**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்**
இல. 47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2020 அன்று வெளியிடப்பட்டது.